# கோயம்புத்தூர் மாநகராட்சி

அனுப்புநர்

திரு ஆர். வெங்கடாசலம்,
மேயர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர்- 641 001

பெறுநர்

மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்கள்,
ஆளும்கட்சி / எதிர் கட்சித் தலைவர்கள்,
வார்டு குழுத் தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
நிலைக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

சட்டமன்ற உறுப்பினர்கள்
(கோவை கிழக்கு, கோவை மேற்கு,
சிங்காநல்லூர், தொண்டாமுத்தூர்
மற்றும் பேரூர் சட்டமன்ற தொகுதிகள்),

பாராளுமன்ற உறுப்பினர்கள்
(கோவை மற்றும் பொள்ளாச்சி
பாராளுமன்றத் தொகுதிகள்)

ந.க.எண் : 4627/ 2010 / எம்சி. 8 நாள் : 19 .5.2010

அய்யா /அம்மா,

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மாமன்ற அவசரக் கூட்டம் - நிகழ்ச்சி நிரல் அனுப்புவது - தொடர்பாக.

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற அவசரக் கூட்டம் வருகின்ற 21.5.2010 வெள்ளிக்கிழமை காலை 11.30 மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அது சமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அனைத்து துறைத்தலைமை அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

இணைப்பு : 2

/ உண்மைநகல் / உத்திரவின்படி/

19/05/10
மாமன்ற செயலாளர்

நகல் :

துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

**மாமன்ற அவசரக் கூட்டம்**

**மே 2010**

## நிகழ்ச்சி நிரல்

| பொருளடக்கம் | |
|---|---|
| அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br>ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி | |
| **வ.எண்** | **இ). தீர்மானத்திற்குரிய பொருள்** |
| 1 | Jnnurm –திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் - 6 க.மீ. ரெப்யூஸ் கலெக்டர் வாகனங்கள் 7 வாங்குதல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 2 | Jnnurm –திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் - குப்பை சேகரிக்கும் பணி - 4 இலகுரக காம்பேக்டர் வாகனங்கள் மற்றும் 500 குப்பை சேகரிப்புத் தொட்டிகள் வாங்குதல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 3 | பொறியியல் பிரிவு - உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு 2010 – அவிநாசி சாலையிலிருந்து கொடீசியா அரங்கத்திற்கு செல்லும் திட்ட சாலைக்கு அணுகு சாலை அமைத்தல் - மதிப்பீடு 159 இலட்சம் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக |
| 4 | வருவாய் பிரிவு -காலியிடங்களுக்கு சொத்துவரி நிர்ணயம் செய்தல்- நகராட்சி நிர்வாக இயக்குநரக சுற்றறிக்கை – பதிவு செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக. |
| 5 | பொறியியல் பிரிவு - திருச்சி சாலை சுங்கம் பகுதி முதல் சங்கனூர் பள்ளம் வரை மைய தெரு விளக்குகள் அமைத்தல் பணி - மதிப்பீடு 75 இலட்சம் - மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக. |
| 6 | தெற்கு மண்டலம் - Dr. நஞ்சப்பா ரோடு வணிக வளாக கடைகள் - உரிமதாரர்கள் பெயர் மாற்றம் செய்தல் – மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 7 | பொதுப் பிரிவு - அகில இந்திய மேயர்கள் மன்றம் - ஆண்டு சந்தா செலுத்துவது – மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 8 | தெற்கு மண்டலம் - உக்கடம் பகுதியில் புதியதாக கட்டப்பட்டுள்ள மீன் விற்பனை அங்காடிகள் - பொது ஏலம் நடத்தி ஒப்படை செய்தல் -மாமன்ற அனுமதி வேண்டுவது - தொடர்பாக. |
| 9 | தெற்கு மண்டலம் - உக்கடம் பகுதியில் புதியதாக கட்டப்பட்டுள்ள நவீன ஆடு அறுவைமனை – பொது ஏலம் நடத்தி ஒப்படை செய்தல்-மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 10 | மேற்கு மண்டலம் - வார்டு எண்.48 – ஆர்.ஜி.வீதியில் கட்டப்பட்டுள்ள புதிய மலர் அங்காடி வளாகம் - பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் குத்தகைதாரர்களுக்கு ஒப்படைப்பு செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக. |
| 11 | பொறியியல் பிரிவு - மேற்கு மண்டலம் - மேட்டுப்பாளையம் ரோடு - புதிய பேருந்து நிலையம் - தனியார் பங்களிப்பு மூலம் இயக்குதல் மற்றும் பராமரித்தல் - விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் - மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| 12 | நகரமைப்புப் பிரிவு - கிழக்கு மண்டலம் - சிங்காநல்லூர் பேருந்து நிலையம் - திருமதி மோகனசுந்தரி என்பவருக்கு ஒதுக்கப்பட்ட கடை – உரிமம் நீட்டிப்பு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| 13 | Jnnurm – குடிசைப்பகுதிகளில் குடியிருப்போர் பட்டியல் தேர்வு செய்தல் குடிசைப்பகுதிகளின் பட்டியல் - மாமன்றம் பதிவு செய்தல் -தொடர்பாக |
| 14 | கிழக்கு மண்டலம் - ஒண்டிப்புதூர் ஆரம்பப் பள்ளி இடம் - நெஞ்சாலைத்துறை கையகப்படுத்துதல் - சத்துணவுக் கூடம் மற்றும் கிணறு அப்புறப்படுத்துதல் - மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| 15 | தெற்கு மண்டலம் - தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்திற்கு – காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம் தடம் எண்.2ல் சுற்றுச்சூழல் பற்றி விபரம் தெரிவிக்க மின்னணு பலகை அமைக்க அனுமதி அளித்தது – மாற்றம் செய்து நகர பேருந்து நிலையத்தில் சுற்றுச்சூழல் மின்னணு பலகை அமைக்க அனுமதித்தல் - மாமன்ற அனமதி கோருதல்- தொடர்பாக |

**நன்றியுரை**

**அ) திருக்குறள்**

**கடனென்ப நல்லவை யெல்லாம் கடனறிந்து**
**சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு.**

**(குறள் 981)**

**விளக்கம்**

**ஆற்றவேண்டிய கடமைகளை உணர்ந்து, அவற்றைப் பண்பார்ந்த முறையில் நிறைவேற்ற மேற்கொள்ளும் முயற்சிகள் அனைத்தும் நல்ல கடமைகள் என்றே கொள்ளப்படும்.**

**திருவள்ளுவர்.**

---

**ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி**

**இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகன்/குடிமகள் ஆகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் தெரிந்தோ, தெரியாமலோ சமூக வேற்றுமையை, மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்கும் என்றும் இதனால் உளமாற உறுதியளிக்கிறேன்.**

## சிறப்புத் தீர்மானம் எண் 1

கோவையில் 23.6.2010 முதல் 27.6.2010 வரை நடைபெற இருக்கின்ற உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டிற்கு உலகத்தின் பல்வேறு நாடுகளிலிருந்து தமிழ் பேரறிஞர்கள், அறிஞர் பெருமக்கள் கோவைக்கு வருகைதர இருக்கிறார்கள். இந்த சமயத்தில் கோவை மாநகரில் உள்ள அனைத்து கடைகள், வணிக நிறுவனங்கள், வியாபார நிறுவனங்கள் அனைத்தும் தமிழில் பெயர் பலகை வைக்கவேண்டும் என்றும், அவ்வாறு எழுதப்படுகின்ற பெயர் பலகைகளில் 60 விழுக்காடு தமிழ் எழுத்துக்களும், மீதி 40 விழுக்காடு ஆங்கிலம் மற்றும் பிற மொழிகளும் எழுதப்பட வேண்டும் என்றும் மேலும் இதற்கு காலக்கெடு நிர்ணயிக்க வேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்ற வேண்டுமாய் திராவிட முன்னேற்றக் கழக மாமன்றக் குழுவின் சார்பாக கேட்டுக் கொள்கிறோம்.

சிறப்புத் தீர்மானம் 1 - தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## பொருள் எண் 1

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் கோயம்புத்தூர் மாநகராட்சியில் ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை செயல்படுத்தும் பணிக்கு ரூ. 96.51 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்ட விரிவான திட்ட அறிக்கையிற்கு மைய அரசின் நகர்புர மேம்பாட்டு அமைச்சகத்தின் "ஒப்புதல் வழங்குதல் மற்றும் கண்காணிப்பு குழு" கடந்த 02-02-2007-ல் ஒப்புதல் வழங்கியுள்ளது. மேற்படி திட்டத்திற்கு அரசாணை 160(டி) ந.நி.மற்றும் குடிநீர் வழங்கல் துறை (மா.ந.-II) துறை நாள் 17-04-2007ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி திட்டத்தில் இம்மாநகராட்சியால் பகுதி–I ன் கீழ் செயல்படுத்தப்படவுள்ள முதற்கட்ட குப்பை சேகரிப்பு பணிகளுக்கு தேவையான 6.க.மீ.கொள்ளளவு கொண்ட ரெப்யூஸ் கலெக்டர் வாகனங்கள் கொள்முதல் செய்யும் (Supply and Delivery of 6 Cu.m capacity Refuse Collector Vehicles) பணிக்கு ரூ.101.50 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சிப்பம்–8 ன் கீழ் (Package–8) எடுக்கப்பட்டுள்ள இப்பணிக்கு கடந்த 27-10-2009ல் இரண்டு உறை முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட நான்கு நிறுவனங்கள் கலந்து கொண்டு அவர்களது ஒப்பந்தப்புள்ளிகளை கொடுத்திருந்தனர்.

1) தி/ள்.காம் அவிடா என்வைரோ இன்ஜீனியர்ஸ் பிரைவேட் லிமிடெட், பூனே
2) தி/ள்.டி.பி.எஸ். இன்ப்ராஸ்ட்ரக்சர்ஸ் லிமிடெட், புது டில்லி
3) தி/ள். வி.இ.கமர்ஸ்சியல் வெகிக்கில்ஸ் லிமிடெட், சென்னை
4) தி/ள். என்.எஸ்.ராமாராவ் பாடி ஒர்க்ஸ், சென்னை

மேல் படிக்கப்பட்ட நான்கு நிறுவனங்கள் கொடுத்திருந்த ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில் நுட்ப பிரேரணைகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வு குழுவினால் திறனாய்வு செய்யப்பட்டதில் வரிசை எண்கள் 1 மற்றும் 2 ஆகியவற்றில் குறிக்கப்பட்டுள்ள இரண்டு நிறுவனங்கள் மட்டுமே தொழில் நுட்ப ரீதியாக தகுதி பெற்றனர். வரிசை எண் 3 மற்றும் 4-ல் குறிக்கப்பட்டுள்ள நிறுவனத்தினர் தொழில் நுட்ப ரீதியாக தகுதி பெறவில்லை. இதனைத் தொடர்ந்து தகுதி பெற்ற இரண்டு நிறுவனங்களின் விலைப்புள்ளிகள் அடங்கிய உறைகளை கடந்த 09-04-2010 அன்று திறக்கப்பட்டதில் மேற்கூறிய நிறுவனங்கள் கீழ்கண்டவாறு அவர்களது விலை விகிதங்களை கொடுத்திருந்தனர்:

| வ. எண் | வாகனங்களின் விபரம் | எண்ணிக்கை | ஒப்பந்ததாரரின் பெயர் | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | தி/ள்.காம் அவிடா என்வைரோ இன்ஜீனியர்ஸ் பிரைவேட் லிமிடெட், புனே | | தி/ள்.டி.பி.எஸ், இன்ப்ராஸ்ட்ரக்சர்ஸ் லிமிடெட், புது டில்லி | |
| | | | அலகு விலை ரூ. | மொத்தம் ரூ. | அலகு விலை ரூ. | மொத்தம் ரூ. |
| 1. | 6.க.மீ.கொள்ளளவு கொண்ட ரெப்யூஸ் கலெக்டர் வாகனங்கள் சப்ளை செய்யும் பணி | 7 | 15,20,862/- | 1,06,46,034/- | 14,27,750/- | 99,94,250/- |
| | மொத்தம் | | | 1,06,46,034/- | | 99,94,250/- |

மேலே படிக்கப்பட்ட இரண்டு நிறுவனங்களின் ஒப்பந்தபுள்ளிகளில் குறைவான ஒப்பந்தபுள்ளியினை ரூ.99,94,250/-க்கு தி/ள்.டி.பி.எஸ், இன்ப்ராஸ்ட்ரக்சர்ஸ் லிமிடெட், புது டில்லி நிறுவனத்தினர் கொடுத்துள்ளனர். மேலும் ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக் குழு மேற்படி குறைவான ஒப்பந்தபுள்ளியினை கொடுத்திருந்த நிறுவனத்திடம் மேலும் விலை குறைப்பு செய்து கொடுக்குமாறு கேட்கலாமென முடிவு செய்தது.

அதனைத் தொடர்ந்து கடந்த 12-04-2010 தேதியில் இம்மாநகராட்சியால் கடிதத்தின் மூலம் கேட்டுக்கொண்டதற்கிணங்க மேற்படி நிறுவனம் அவர்களது 19-04-2010 தேதியிட்ட கடிதத்தில் ஒரு வாகனத்தின் அலகு விலையினை ரூ.14,27,750/- லிருந்து ரூ.14,25,000/- க்கு விலை குறைப்பு செய்து கொடுக்க இசைவு தெரிவித்தனர். விலை குறைப்பிற்குப் பின்னர் மேற்கூறிய நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளிகளின் விலை விகிதங்கள் கீழ்கண்டவாறு அமையும்:

| வ. எண் | வாகனங்களின் விபரம் | எண் ணிக் கை | ஒப்பந்ததாரரின் பெயர் | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | தி/ள்.காம் அவிடா என்வைரோ இன்ஜீனியர்ஸ் பிரைவேட் லிமிடெட், புனே | | தி/ள்.டி.பி.எஸ், இன்ப்ராஸ்ட்ரக்சர்ஸ் லிமிடெட், புது டில்லி | |
| | | | அலகு விலை ரூ. | மொத்தம் ரூ. | அலகு விலை குறைப் பிற்குப் பின்னர் ரூ. | மொத்தம் ரூ. |
| 1. | 6.க.மீ.கொள்ளளவு கொண்ட ரெப்யூஸ் கலெக்டர் வாகனங்கள் சப்ளை செய்யும் பணி | 7 | 15,20,862/- | 1,06,46,034/- | 14,25,000/- | 99,75,000/- |
| | மொத்தம் | | | 1,06,46,034/- | | 99,75,000/- |

மேற்படி குறைத்து கொடுத்துள்ள விலைப்புள்ளியை 21-04-2010ல் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டதில், மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்றத்திற்கு ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு பரிந்துரை செய்துள்ளது.

எனவே ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் சிப்பம்–8 ன் கீழ் எடுக்கப்பட்டு இம்மாநகராட்சியால் பகுதி–I ன்கீழ் செயல்படுத்தப்படவுள்ள முதற்கட்ட குப்பை சேகரிப்பு பணிகளுக்கு தேவையான 6.க.மீ.கொள்ளளவு கொண்ட ரெப்யூஸ் கலெக்டர் வாகனங்கள் கொள்முதல் செய்யும் (Supply and Delivery of 6 Cu.m capacity Refuse Collector Vehicles) பணிக்கு குறைவான ஒப்பந்தபுள்ளி ரூ.99,75,000/-க்கு கொடுத்துள்ள தி/ள்.டி.பி.எஸ். இன்ப்ராஸ்ட்ரக்சர்ஸ் லிமிடெட், புது டில்லி நிறுவனத்தினரின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்க மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் :11198/2009/ஜே.என்3

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 37 நாள் 21.05.10</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## <u>பொருள் எண் 2</u>

நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களது கடித எண் ந.க.எண். 23529/2008/P2 நாள் : 25-09-2008 மற்றும் 11-02-2009-ல், 2008-2009-ம் ஆண்டுக்கான மைய அரசின் 12 வது நிதிக்குழுவின் பரிந்துரையின்படி கோயம்புத்தூர் மாநகராட்சிக்கென நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். மைய அரசின் நிதிக்குழுவின் பரிந்துரைகளின் நெறிமுறைகளின்படி உள்ளாட்சிகளுக்கென மொத்த நிதி ஒதுக்கீட்டில் 50% திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் முதற்கட்ட குப்பை சேகரிப்பு பணிகளுக்காக செலவு செய்ய வேண்டும். அதனடிப்படையில் கோயம்புத்தூர் மாநகராட்சிக்கென மொத்த நிதி ஒதுக்கீட்டில் 50% தொகையான ரூ.2.05 கோடி மானியத்தொகை திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் முதற்கட்ட குப்பை சேகரிப்பு பணிகளுக்கு தேவையான 4 எண்ணிக்கையிலான இலகுரக காம்பேக்டர் வாகனங்கள் மற்றும் 500 எண்ணிக்கையிலான 660 லிட்டர் கொள்ளளவுள்ள உலோகத்திலான குப்பை சேகரிப்புத் தொட்டிகள் கொள்முதல் (Supply and Delivery of Mini Compactors with 660 litres capacity wheeled G.I Sheet Waste Storage Bins) செய்யும் பணிக்கு கடந்த 26-02-2009 அன்று நடைபெற்ற மாமன்ற கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து கடந்த 10-11-2009 ல் மேற்கூறிய பணிக்கு இரண்டு உறை முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட ஐந்து நிறுவனங்கள் கலந்து கொண்டு அவர்களது ஒப்பந்தப்புள்ளிகளை கொடுத்திருந்தனர்.

1) தி/ள்.காம் அவிடா என்வைரோ இன்ஜீனியர்ஸ் பிரைவேட் லிமிடெட், பூனே
2) தி/ள்.டி.பி.எஸ். இன்ப்ராஸ்ட்ரக்சர்ஸ் லிமிடெட், புது டில்லி
3) தி/ள். வி.இ.கமர்ஸ்சியல் வெகிக்கில்ஸ் லிமிடெட், சென்னை
4) தி/ள். சிண்டெக்ஸ் இண்டஸ்டிரிஸ், சென்னை
5) தி/ள். என்.எஸ்.ராமாராவ் பாடி ஒர்க்ஸ், சென்னை

மேலே படிக்கப்பட்ட ஐந்து நிறுவனங்கள் கொடுத்திருந்த ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில் நுட்ப பிரேரணைகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வு குழுவினால் திறனாய்வு செய்யப்பட்டதில் வரிசை எண்கள் 1, 2, மற்றும் 4-ல் குறிக்கப்பட்டுள்ள மூன்று நிறுவனங்கள் மட்டுமே தொழில் நுட்ப ரீதியாக தகுதி பெற்றனர். வரிசை எண் 3 மற்றும் 5-ல் குறிக்கப்பட்டுள்ள நிறுவனத்தினர் தொழில் நுட்ப ரீதியாக தகுதி பெறவில்லை. இதனைத் தொடர்ந்து தகுதி பெற்ற மூன்று நிறுவனங்களின் விலைப்புள்ளிகள் அடங்கிய உறைகளை கடந்த 09-04-2010 அன்று திறக்கப்பட்டதில் மேற்கூறிய நிறுவனங்கள் கீழ்கண்டவாறு அவர்களது விலை விகிதங்களை கொடுத்திருந்தனர்:

| வ. எண் | இயந்திரங் களின் விபரம் | ஒப்பந்ததாரரின் பெயர் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | தி/ள்.காம் அவிடா என்வைரோ இன்ஜீனியர்ஸ் பிரைவேட் லிமிடெட், புனே | | தி/ள்.டி.பி.எஸ். இன்ப்ராஸ்ட்ரக்சர்ஸ் லிமிடெட், புது டில்லி | | தி/ள். சிண்டெக்ஸ் இண்டஸ்டிரிஸ், சென்னை | |
| | | அலகு விலை ரூ. | மொத்தம் ரூ. | அலகு விலை ரூ. | மொத்தம் ரூ. | அலகு விலை ரூ. | மொத்தம் ரூ. |
| 1. | 4 எண்ணிக்கை கள் இலகுரக காம்பேக்டர் வாகனங்கள் சப்ளை செய்தல் | 15,20,862/- | 60,83,448/- | 15,00,000/- | 60,00,000/- | 14,25,000/- | 57,00,000/- |
| 2. | 500 எண்ணிக்கை கள் 660 லிட்டர் கொள்ளளவு உள்ள உலோகத்தி லான குப்பை சேகரிப்புத் தொட்டிகள் சப்ளை செய்தல் | 23,875/- | 1,19,37,500/- | 12,000/- | 60,00,000/- | 28,000/- | 1,40,00,000/- |
| | மொத்தம் | | 1,80,20,948/- | | 1,20,00,000/- | | 1,97,00,000/- |

மேலே படிக்கப்பட்ட மூன்று நிறுவனங்களின் ஒப்பந்தபுள்ளிகளில் குறைவான ஒப்பந்தபுள்ளியினை ரூ.120,00,000/-க்கு தி/ள்.டி.பி.எஸ்.இன்ப்ராஸ்ட்ரக்சர்ஸ் லிமிடெட், புது டில்லி நிறுவனத்தினர் கொடுத்துள்ளனர். ஒப்பந்தப்புள்ளி திறனாய்வு குழுவினால் மேற்படி நிறுவனத்திடம் விலை குறைப்பு செய்து கொடுக்குமாறு கேட்கலாமென முடிவு செய்தனைத் தொடர்ந்து கடந்த 12-04-2010 தேதியில் இம்மாநகராட்சியால் கடிதம் மூலம் கேட்டுக்கொண்டதற்கிணங்க மேற்படி நிறுவனம் அவர்களது 19-04-2010 தேதியிட்ட கடிதத்தில் ஒரு வாகனத்தின் அலகுவிலையினை ரூ.15,00,000/- இருந்து ரூ.14,25,000/- க்கு விலைகுறைப்பு செய்து கொடுக்க இசைவு தெரிவித்தனர். விலைகுறைப்புக்கு பின்னர் மேற்கூறிய நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளிகளின் விலை விகிதம் கீழ்க்கண்டவாறு அமையும்

| வ. எண் | இயந்திரங்களின் விபரம் | தி/ள்.டி.பி.எஸ், இன்ப்ராஸ்ட்ரக்சர்ஸ் லிமிடெட், புது டில்லி | |
|---|---|---|---|
| | | குறைத்துக் கொடுக்கப்பட்டப் பின்னர் அலகு விலை ரூபாயில் | மொத்த விலை ரூபாயில் |
| 1. | 4 எண்ணிக்கைகள் இலகுரக காம்பேக்டர் வாகனங்கள் சப்ளை செய்தல் | 14,25,000.00 | 57,00,000.00 |
| 2. | 500 எண்ணிக்கைகள் 660 லிட்டர் கொள்ளளவுள்ள உலோகத்திலான குப்பை சேகரிப்புத் தொட்டிகள் சப்ளை செய்தல் | 12,000.00 | 60,00,000.00 |
| | மொத்தம் | | 1,17,00,000.00 |

மேற்படி குறைத்து கொடுத்துள்ள விலைப்புள்ளியை 21-04-2010ல் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளி திறனாய்வு குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டதில், மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்றத்திற்கு ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு பரிந்துரை செய்துள்ளது.

எனவே மைய அரசின் 12 வது மானிய நிதிக்குழு திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்டு இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படவுள்ள திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் முதற்கட்ட குப்பை சேகரிப்பு பணிகளுக்கு தேவையான 4 எண்ணிக்கையிலான இலகுரக காம்பேக்டர் வாகனங்கள் மற்றும் 500 எண்ணிக்கையிலான 660 லிட்டர் கொள்ளளவுள்ள உலோகத்திலான குப்பை சேகரிப்புத்தொட்டிகள் கொள்முதல் **(Supply and Delivery of Mini Compactors with 660 litres capacity wheeled G.I Sheet Waste Storage Bins)** செய்யும் பணிக்கு குறைவான ஒப்பந்தபுள்ளி ரூ.1,17,00,000/-க்கு கொடுத்துள்ள தி/எ்.டி.பி.எஸ்.இன்ப்ராஸ்ட்ரக்சர்ஸ் லிமிடெட், புது டில்லி நிறுவனத்தினரின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்க மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம்** **ந.க.எண் : 1542/2009/(எம் டி3) எம் டி2**

**மாநகர மன்ற தீர்மானம் எண் 38 நாள் 21.05.10**

**அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

---

## பொருள் எண் 3

**பொருள் :** கோயம்புத்தூர் மாநகராட்சி –உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு 2010 – மாநாடு நடைபெறும் கொடீசியா அரங்கத்திற்கு அவிநாசி சாலையிலிருந்து செல்லும் திட்ட சாலைக்கு அணுகு சாலை அமைத்தல் - மதிப்பீடு ரூ.159 இலட்சம் – வரப் பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்றத்தின் பின்னேற்பு வேண்டுதல் – தொடர்பாக.

**பார்வை :**

1. அரசாணை எண் : (3டி) எண் : 11 நாள் : 07.04.2010 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை
2. மாமன்றத்தீர்மான எண் : 1 நாள் :16.04.2010
3. நகராட்சிகளின் நிர்வாக இயக்குனரக தலைமைப் பொறியாளரின் தொழில் நுட்ப அனுமதி எண்:14429/2010/D01 நாள் : 14.04.2010
4. ஒப்பந்தப்புள்ளி நாள் : 03.05.2010
5. தொழில் நுட்ப கூர்ந்தாய்வுக்குழு அறிக்கை நாள் : 05.05.2010
6. விலைப்புள்ளி உறை திறப்பு நாள் : 06.05.2010
7. ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக் குழு நாள் :06.05.2010.
8. வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி நாள் :06.05.2010

*******

கோயம்புத்தூரில் நடைபெற உள்ள உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டினையொட்டி மாநாடு நடைபெறும் கொடீசியா அரங்கத்திற்கு அவிநாசி சாலையிலிருந்து செல்லும் திட்ட சாலைக்கு அணுகு சாலை அமைத்தல் பணிக்கு மதிப்பீடு ரூ.159 இலட்சத்திற்கு பார்வை 1ன் படி அரசின் நிதி ஒப்பளிப்பு மற்றும் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக நகராட்சிகளின் நிர்வாக இயக்குனரக தலைமைப் பொறியாளரால் தொழில் நுட்ப அனுமதி 14-04-2010ல் வழங்கப்பட்டுள்ளது.

இப்பணிக்கு 03.05.2010அன்று மின்னணு முறையில் (இரு உறைகள் முறையில்) ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட ஒரே ஒப்பந்தப்புள்ளி மட்டும் பெறப்பட்டது.

1. திரு. ஆர்.கிருஷ்ணசாமி , கோவை

மேற்கண்ட ஒப்பந்ததாரர் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை நகராட்சிகளின் நிர்வாக இயக்குனரக தொழில் நுட்ப கூர்ந்தாய்வுக்குழு பரிசீலனை செய்து மேற்படி ஒப்பந்ததாரர் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்க 05.05.2010 அன்று ஒப்புதல் வழங்கியுள்ளது. இதன் தொடர்ச்சியாக இந்த ஒப்பந்ததாரர் அளித்துள்ள விலைப்புள்ளி உறையினை 06.05.2010 அன்று திறக்கப்பட்டது. அதன்படி திரு. ஆர்.கிருஷ்ணசாமி, கோவை அவர்கள் இப்பணிக்கான மதிப்பீட்டிற்கு 0.95% குறைவாக விலைப்புள்ளி அளித்துள்ளார்.

இந்த ஒப்பந்ததாரர் அளித்துள்ள விலைப்புள்ளியினை 06.05.2010 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக் குழவில் பரிசீலனை செய்யப்பட்டு திரு.ஆர்.கிருஷ்ணசாமி,கோவை அவர்கள் 0.95% மதிப்பீட்டிற்கு குறைவாக அளித்துள்ள விலைப்புள்ளியினை மாமன்றம் ஏற்க பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி திரு.ஆர்.கிருஷ்ணசாமி, கோவை அவர்கள் 0.95% மதிப்பீட்டிற்கு குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கவும் இப்பணியினை உடனடியாக துவங்கவும் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்பட்டதில் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் 06.05.2010 அன்று முன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக இப்பணிக்கான ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்றத்தின் பின்னேற்பு வேண்டி பொருள் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு : ஒப்புதல் அளிக்கலாம்.** **ந.க.எண் : 04522/2010/MD2**

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 39 நாள் 21.05.10</u>

அலுவலகக் குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## <u>பொருள் எண் 4</u>

பொருள்- காலியிடங்களுக்கு சொத்துவரி நிர்ணயம் செய்தல்-கோயம்புத்தூர் மாநகராட்சி-தமிழ்நாடு பேரூராட்சிகள், மூன்றாம் நிலை நகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் (காலியிடங்களுக்கு சொத்துவரி விதிப்பு) விதிகள் 2009-காலியிட வரி வீதம் (Rate) நிர்ணயம் செய்யப்பட்டது – நகராட்சி நிர்வாக இயக்குநரக சுற்றறிக்கை – பதிவு செய்தல் - தொடர்பாக.

பார்வை-
1. அரசு ஆணை எண் 775 ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை நாள் 27.5.1983
2. நகராட்சி நிர்வாக இயக்குனர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 38714/2009/ஆர்.1 நாள் 2.4.09
3. அரசு ஆணை எண்.151 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழுங்கல் (தேர்தல்) துறை நாள் 20.08.2009.
4. மாமன்ற தீர்மானம் எண் 58 நாள் 11.09.2009
5. நகராட்சி நிர்வாக இயக்குனர் அவர்களின் சுற்றறிக்கை மூ.மு.எண். 57528/09/ஆர்-1 நாள் 24.12.2009
6. நகராட்சி நிர்வாக இயக்குனர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 41802/2009/ஆர்.1 நாள் 19.03.2010

----------

கோயம்புத்தூர் மாநகராட்சியில் அரசு ஆணை எண். 775 ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை நாள் 27.5.1983 மற்றும் மாநகர மன்ற தீர்மானம் எண். 506 நாள் 12.08.83, 677 நாள் 30.9.93, 238 நாள் 5.1.05-ன்படி, மாநகராட்சி பகுதிகளில் உள்ள காலியிடங்களுக்கு காலியிட மூலதன மதிப்பின்மீது அரையாண்டு ஒன்றிற்கு காலியிட வரியாக 1% சதவிகிதமும், காலியிட வரியில் 10% நூலக வரியாகவும், 2.5% சதவிகிதம் கல்வி வரியாகவும், மொத்தம் 1.125% சதவிகிதம் காலியிட வரி விதிக்கப்பட்டு வருகிறது.

கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டம் 1981 பிரிவு 168ன்படி விடுபட்ட வரியினங்களை ஆறு ஆண்டுகள் வரை முன்தேதியிட்டு, வரிவிதிப்பு செய்யப்படும் அரையாண்டுக்கான வரியையும் சேர்த்து 13 (பதிமூன்று) அரையாண்டுகளுக்கு வரிவிதிப்பு செய்யப்படவேண்டும் எனவும், காலிமனை வரியை பொறுத்தவரை எந்த அரையாண்டு முதல் வரிவிதிப்பு செய்யப்படுகின்றதோ அந்த அரையாண்டில் பத்திரப்பதிவு அலுவலகத்தில் வழிகாட்டு மதிப்பைப் பெற்று ( Guideline value) வரிவிதிப்பு செய்யப்பட வேண்டும் எனவும் பார்வை 2-ல் காணும் நகராட்சி நிர்வாக இயக்குனரக சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டு, இதன்படி பத்திரப்பதிவு அலுவலகத்தில் வழிகாட்டு மதிப்பைப் பெற்று (Guideline value) 13 அரையாண்டுகளுக்கு வரிவிதிப்பு செய்யப்பட்டு வந்தது.

பேரூராட்சிகள், மூன்றாம் நிலை நகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சி பகுதிகளில் காலியிடங்களுக்கு விதிக்கப்படும் சொத்துவரி விகிதம் நிலத்தின் முதலீட்டு மதிப்பின் (Capital Value) அடிப்படையில் நிர்ணயம் செய்யாமல் சதுரடி (Square Feet) அடிப்படையில் நிர்ணயம் செய்யவும், அவ்வாறு விதிக்கப்படும் காலியிடங்களுக்கான சொத்துவரியின் குறைந்தபட்சம் சதுரடிக்கு 20 பைசா முதல் உயர்ந்தபட்சம் 60 பைசா வரை அரசு நிர்ணயம் செய்தும், அரசு ஆணை எண்.151, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 20.08.2009 மற்றும் தமிழ்நாடு பேரூராட்சிகள், மூன்றாம் நிலை நகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் (காலியிடங்களுக்கு சொத்துவரி விதிப்பு) விதிகள் ‘2009-ல் அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. இவ்விதிகள் 01.09.2009 முதல் அமுலுக்கு வருகிறது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாநகர மன்ற தீர்மானம் எண் 58 நாள் 11.09.2009-ன்படி,

அரசு ஆணை எண்.151 ந.நி.ம.கு.வ.(தேர்தல்) துறை நாள் 20.08.2009- ஐப் பதிவு செய்யவும்,

நகராட்சி நிர்வாக இயக்குநரக சுற்றறிக்கை ந.க.எண்.41802/2009/ஆர்.1, நாள் 07.09.2009-ஐப் பதிவு செய்து சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளவாறு நடைமுறைப்படுத்தவும்,

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் பரிந்துறையை ஏற்று அரசு நிர்ணயம் செய்துள்ள உயர்ந்தபட்ச விகிதத்தில் காலியிடங்களுக்கான சொத்துவரியினை குடியிருப்பு பகுதிகளில் உள்ள தெருக்கள் முதலியவற்றுக்கு சதுரடிக்கு 40 பைசா எனவும், பிரதான சாலைகள் மற்றும் பேருந்து போக்குவரத்துச் சாலைகள் (முக்கியமான சாலைகளுக்குச் செல்லும் சாலைகள் நீங்கலாக) முதலியவற்றுக்கு சதுரடிக்கு 50 பைசா எனவும், முக்கியமான சாலைகள், பிரதான சாலைகள் மற்றும் முக்கிய சாலைகளுக்கு செல்லும் பேருந்து போக்குவரத்து சாலைகள் முதலியவற்றுக்கு சதுரடிக்கு 60 பைசா எனவும், 2009-10 இரண்டாம் அரையாண்டு முதல் புதிய விகிதத்தில் காலியிடங்களுக்கான சொத்துவரியினை நிர்ணயம் செய்யவும் தீர்மானிக்கப்பட்டது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பார்வை 5-ல் காணும் நகராட்சி நிர்வாக இயக்குனர் அவர்களின் சுற்றறிக்கையின்படி, அரசு ஆணை வெளியிடப்பட்ட தேதிக்குப் பின்னர் அதற்கு முந்தைய காலங்களுக்கும் வரிவிதிப்பு இதுவரையும் செய்யப்படாமல் இருப்பின் மூலதன மதிப்பில் வரிவிதிப்பு செய்ய இயலாது எனவும், சதுர அடி அடிப்படையிலேயே வரி விதிக்கப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி காலியிட வரி நிர்ணயம் செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தது.

பார்வை 6-ல் காணும் நகராட்சி நிர்வாக இயக்குநரக சுற்றறிக்கையில், விதிகளில் புதிய சட்டத் திருத்தம் வெளியிட்ட பிறகு நிலுவையில் உள்ள காலிமனை வரியினை பல வருடங்களாக வரி விதிப்பாளர்களிடமிருந்து காலிமனை வரி வசூல் செய்வது தொடர்பாக அரசு வழக்கறிஞரிடமிருந்து சட்ட ஆலோசனை பெறப்பட்டுள்ளது. அரசு வழக்கறிஞர் வழங்கியுள்ள சட்ட ஆலோசனையில் இந்த அரசு ஆணை (அ.ஆ.எண். 151, நாள் 20.8.2009 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (தேர்தல்) துறை) நடைமுறைப்படுத்தப்பட்ட தேதிக்கு முன்னர் (அதாவது 01.10.2009) விதிக்கப்படும் காலி மனைகளுக்கான சொத்து வரியானது, முன்னர் கடைபிடிக்கப்பட்ட அரசாணை, வழிமுறைகளின்படிதான் வரி விதிப்பு செய்யப்பட வேண்டும் எனவும் 01.10.2009க்கு முன்னர் விதிக்கப்படும் காலிமனைகளுக்கான சொத்துவரியானது முன்னர் கடைபிடிக்கப்பட்ட அரசாணை, மற்றும் வழிமுறைகளின்படிதான் வரிவிதிப்பு செய்யப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலியிட வரிவிதிப்பு குறித்து வெளியிடப்பட்ட பார்வை 6-ல் காணும் சுற்றறிக்கை வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் பார்வைக்கும், பதிவுக்கும் சமர்ப்பிக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 13 நாள் 17.5.10ன்படி, அரசு ஆணை எண் 151, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள். 20.08.09 மற்றும் மாநகர மன்ற தீர்மானம் எண். 58 நாள் 11.09.09ல் நிர்ணயம் செய்தபடி சதுர அடிக்கு 40 பைசா, 50 பைசா, 60 பைசா என்ற விகிதத்தில் 13 அரையாண்டுகளுக்கும் காலியிட வரிவிதிப்பு செய்ய விரைந்து அனுமதிக்குமாறு மாமன்ற ஒப்புதலுடன் அரசைக் கோர தீர்மானிக்கப்பட்டது என தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

பார்வை 6-ல் காணும் சுற்றறிக்கை மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும், சமர்ப்பிக்கப்படுகிறது. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் பரிந்துரை மாமன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம். ந.க.எண். 8945/09/MA1

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 40 நாள் 21.05.10</u>

அரசு ஆணை எண். 151 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள் 20.08.09ல் தெரிவித்துள்ளவாறு, மாநகர மன்ற தீர்மானம் எண். 58 நாள் 11.09.09ல் காலியிட வரியாக சதுர அடிக்கு 40 பைசா, 50 பைசா, 60 பைசா என்ற விகிதத்தில் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

நகராட்சி நிர்வாக இயக்குனர் சுற்றறிக்கை ந.க.எண். 41802/2009/ஆர். 1 நாள் 19.03.10 அரசாணையின் நோக்கத்திற்கு எதிராக உள்ளது. இச்சுற்றறிக்கையினால் பொதுமக்கள் மத்தியில் பெரும் குழப்பமும், கடும் அதிருப்தியும் ஏற்பட்டுள்ளது. எனவே அரசு ஆணை எண். 151 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள் 20.08.09 ல் தெரிவித்துள்ளவாறு 13 அரையாண்டுகளுக்கும் சதுர அடி ஒன்றுக்கு 40 பைசா, 50 பைசா, 60 பைசா என்ற விகிதத்தில் காலியிட வரி நிர்ணயம் செய்யும் வண்ணம் உத்திரவு பிறப்பிக்க அரசைக்கோர ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

---

<u>பொருள் எண் 5</u>

கோவை மாநகராட்சிக்கு உட்பட்ட திருச்சி பிரதான சாலை, தேசிய நெடுஞ்சாலை துறையால் அகலப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. இச்சாலையில் ஏற்கனவே உள்ள மையத் தடுப்புச்சுவர் மாற்றியமைக்கப்படவுள்ளது. மைய தெருவிளக்கு கம்பங்கள் அமைத்து பத்து வருடத்திற்கு மேல் ஆவதால், அக்கம்பங்களை அகற்றி புதியதாக இச்சாலையின் மையத்தில் சங்கனூர் பாலத்திலிருந்து சுங்கம் வரை 10மீ அளவுள்ள 8 பட்டைகள் கொண்ட 75 மைய தெருவிளக்கு கம்பங்கள் அமைத்து, ஒவ்வொரு கம்பங்களிலும் தலா இரண்டு 250 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகள் பொருத்த ரூ. 75,00,000 /- க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டு, நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண். 4927 / 2010 / எம். டி 3

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 41 நாள் 21.05.10</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது. உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டிற்கு முன்பு இப்பணி முடிக்க வேண்டியுள்ளதால் அவசர அவசியம் கருதி குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கோர தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 6

பார்வை :1) அரசு ஆணை எண். 92.ந.நி.ம கு.வ. துறை நாள் 03.07.07.

2) வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.11 நாள்.10.05.2010

******

கோவை மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட Dr. நஞ்சப்பா ரோடு வணிக வளாகத்தில் உள்ள கீழ்குறிப்பிட்டுள்ள கடைகளின் தற்போதைய அனுபோகதாரர்கள் மேற்படி கடைகளின் உரிமத்தினை பார்வை 1-ல் கண்ட அரசாணைப்படி தங்களது பெயருக்கு பெயர் மாற்றம் செய்து தருமாறும் அதற்குண்டான கட்டணங்களை செலுத்தியும் விண்ணப்பங்கள் அளித்துள்ளனர்.

| வ. எண் | கடை எண் | முந்தைய உரிமதாரர் பெயர் | தற்போதைய அனுபோகதாரர் பெயர் | ஒரு வருட கட்டணம் ரூ. | இரசீது எண். நாள் | பெயர் மாற்ற கட்டணம் ரூ | இரசீது எண். நாள் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 1 | வி.சுந்தராஜ் | ஷபீர்யூசுப்இமானி | 52788/- | 1947/18.12.09 | 60,000/- | 1949/18.12.09 |
| 2 | 2 | ஹக்கீம் | ஷபீர்யூசுப்இமானி | 46116/- | 1993/18.12.09 | 60,000/- | 1997/18.12.09 |
| 3 | 3 | பழனிசாமி | எம்.எஸ்,ராஜா | 44088/- | 2013/18.12.09 | 60,000/- | 2014/18.12.09 |
| 4 | 6 | தேவராஜ் | ஆர்.ரமேஷ் | 43476/- | 20337/18.11.09 | 60,000/- | 2066/18.12.09 |
| 5 | 7 | துளசிராஜ் | பாபு | 53340/- | 2172/18.12.09 | 60,000/- | 2074/18.12.09 |
| 6 | 8 | ஜெகதீசன் | தா.ராம்கோபால் | 49044/- | 2080/18.12.09 | 60,000/- | 2083/18.12.09 |
| 7 | 9 | தேவராஜ் | ஆர். அமுதா | 52788/- | 782 / 13.02.10 | 60,000/- | 781 / 13.02.10 |
| 8 | 10 | ராமகிருஷ்ணன் | பாலசுப்ரமணியம் | 43296/- | 810/ 13.02.10 | 60,000/- | 807/ 13.02.10 |
| 9 | 11 | பி.கே.ராஜ் | எஸ். கனகராஜ் | 62076/- | 2147/ 18.12.10 | 60,000/- | 2150/18.02.10 |
| 10 | 14 | ராமகிருஷ்ணன் | ஜி.ரவிக்குமார் | 80076/- | 2186/ 1812.10 | 60,000/- | 2187/18.12.09 |
| 11 | 16 | முத்துகுமார் | கே.ஏ. பிரதீப் | 105444/- | 2181 /18.12.09 | 60,000/- | 2182/18.12.09 |
| 12 | 17 | சீதாராமன் | கே.ஏ. பிரதீப் | 105444/- | 2177/18.12.09 | 60,000/- | 2178/18.12.09 |
| 13 | 19 | ரகுராம் | ஜெ.மனோகரன் | 93660/- | 2173/18.12.09 | 60,000/- | 2174/18.12.09 |
| 14 | 20 | துரைசாமி | கே. நடராஜன் | 102972/- | 2164/18.12.09 | 60,000/- | 2168/18.12.09 |
| 15 | 21 | சந்திரகாந்தி | தாவூத் எஸ்.ஒரா | 54576/- | 2155/18.12.09 | 60,000/- | 2158 /18.12.09 |
| 16 | 22 | வெங்கடேசன் | ஜி.ராஜேந்திரன் | 53964/- | 766/ 13.02.10 | 60,000/- | 758 / 13.02.10 |

மேற்குறிப்பிட்டுள்ள விவரப்படி பெயர் மாற்றம் செய்வதற்கான தொகையினை அரசாணையில் தெரிவித்துள்ளபடி செலுத்தியுள்ள மனுதாரர்களுக்கு மேற்படி கடைகளின் உரிமையினை பெயர் மாற்றம் செய்வதற்கு பார்வை 2-ல் கண்ட வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.11 நாள்.10.05.2010ல் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்காண் பொருள் குறித்து மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண். 1105 / 2008 / அ1

## மாநகர மன்ற தீர்மானம் எண் 42 நாள் 21.05.10

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண். 11 நாள் 10.05.10ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 7

பொருள் - கோயம்புத்தூர் மாநகராட்சி – அகில இந்திய மேயர்கள் மன்றம் - ஆண்டு சந்தா செலுத்துவது – மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக.

பார்வை - செயலாளர், அகில இந்திய மேயர்கள் மன்றம், புது டெல்லி அவர்களின் கடித எண் 4169/AICM நாள் 23.4.10

-------------

கோயம்புத்தூர் மாநகர மன்றத்தின் வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள், அகில இந்திய மேயர்கள் மன்றம், புதுடெல்லியில் அங்கத்தினராக இருந்து வருகிறார். இதற்கு 2008-09 மற்றும் 2010-11 ம் நிதியாண்டிற்கான ஆண்டு சந்தாவாக மொத்தம் ரூ. 20,000 (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) செலுத்துமாறு பார்வையில் காணும் கடிதத்தில் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

எனவே, இம்மாநகர மன்றத்தின் சார்பாக 2008-09 மற்றும் 2010-11 ம் நிதியாண்டிற்கான ஆண்டு சந்தாவாக ரூ. 20,000 (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) –ஐ தலைவர், அகில இந்திய மேயர்கள் மன்றம், புது டெல்லி என்ற பெயரில் செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண். 4655/10/ எம்.சி. 8

### மாநகர மன்ற தீர்மானம் எண் 43 நாள் 21.05.10

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 8

பொருள் கோயம்புத்தூர் மாநகராட்சி – தெற்கு மண்டலம் - உக்கடம் பகுதியில் புதியதாக கட்டப்பட்டுள்ள மீன் விற்பனை அங்காடிகள் - பொது ஏலம் நடத்தி ஒப்படை செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டுவது - தொடர்பாக.

பார்வை வரிவிதிப்பு மற்றும் நிதிகுழு தீர்மான எண். 15 நாள். 17.5.2010

******

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட தெற்கு உக்கடம் பகுதியில் மீன் மார்க்கெட் கடைகள் தற்போது செயல்பட்டு வருகிறது. மேற்படி இடத்தில் உள்ள கட்டிடங்கள் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதால் மீன் மார்க்கெட் கடைகள் இடமாற்றம் செய்யும் பொருட்டு உக்கடம், செல்வபுரம் பைபாஸ் ரோட்டில் மாநகராட்சிக்குச் சொந்தமான இடத்தில் நவீன வசதிகளுடன் மீன் விற்பனை அங்காடிகள் கட்டப்பட்டு கட்டுமான பணிகள் முடிவுற்று இறுதி கட்ட பணிகள் நடைபெற்று வருகிறது. இங்கு மொத்தம் 68 கடைகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மேற்படி 68 கடைகளையும் ஒரே குத்தகை இனமாக ஒப்பந்தபுள்ளி கோரவும், வணிகவளாக கட்டிடங்களுக்குண்டான சிறப்பு பொது நிபந்தனைகளில் கண்டுள்ள ஷரத்துகளின் அடிப்படையில் ஒப்படை செய்ய பார்வையில் கண்ட வரிவிதிப்பு மற்றும் நிதிகுழு தீர்மான எண். 15 நாள். 17.5.2010ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. எனவே மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது

அலுவலகக்குறிப்பு-அனுமதிக்கலாம் ந.க.எண்.4006/2010/அ1

### மாநகர மன்ற தீர்மானம் எண் 44 நாள் 21.05.10

1. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண். 15 நாள் 17.05.2010 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

2. உக்கடம் பகுதியில் புதியதாக கட்டப்பட்டுள்ள மீன் விற்பனை அங்காடியில் உள்ள அனைத்துக் கடைகளையும் தனித்தனியாக குத்தகைக்கு விடவேண்டும் என தெரிவித்து சி.பி.எம்,, சி.பி.ஐ., மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் 57வது வார்டு சுயேட்சை மாமன்ற உறுப்பினர் ஆகியோர் ஆட்சேபனை தெரிவித்தனர். அவர்களது ஆட்சேபனை பதிவு செய்யப்பட்டது.

---

## பொருள் எண் 9

பொருள் கோயம்புத்தூர் மாநகராட்சி – தெற்கு மண்டலம் - உக்கடம் பகுதியில் புதியதாக கட்டப்பட்டுள்ள நவீன ஆடு அறுவைமனை – பொது ஏலம் நடத்தி ஒப்படை செய்ய அனுமதி கோருதல் - தொடர்பாக.

பார்வை வரிவிதிப்பு மற்றும் நிதிகுழு தீர்மான எண். 17 நாள். 17.5.2010

******

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட தெற்கு உக்கடம் பகுதியில் ஸ்லேட்டர் ஹவுஸ் பகுதியில் ஆடு அறுவைமனைகள் தற்போது செயல்பட்டு வருகிறது. மேற்படி இடத்தில் உள்ள கட்டிடங்கள் மிகவும் பழுதடைந்து உள்ளதால் ஆடு அறுவை மனையை நவீன வசதிகளுடன் கூடிய புதிய ஆடு அறுவைமனை கட்டிடம் கட்டப்பட்டு கட்டுமான பணிகள் முடிவுற்று இறுதி கட்ட பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்படி ஆடு அறுவைமனை கட்டிடத்தினை பொது ஏலம் நடத்தி உயர்ந்தபட்ச கேள்வி தொகைகள் கோரும் ஏலதாரர்களுக்கு மாநகராட்சி குத்தகை இன பொது ஏல நிபந்தனைகளில் கண்டுள்ள ஷரத்துகளின் அடிப்படையில் ஒப்படை செய்ய பார்வையில் கண்ட வரிவிதிப்பு மற்றும் நிதிகுழு தீர்மான எண். 17 நாள். 17.5.2010ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. எனவே மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு-அனுமதிக்கலாம் ந.க.எண்.4007/2010/அ1

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 45நாள் 21.05.10</u>

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண். 17 நாள் 17.05.10ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது

---

## <u>பொருள் எண் 10</u>

பொருள்- கோவை மாநகராட்சி – மேற்கு மண்டலம் - வார்டு எண்.48 – ஆர்.ஜி.வீதியில் புதிய மலர் அங்காடி வளாகம் கட்டப்பட்டு அனைத்து பணிகளும் முடிவடைந்த நிலையில் உள்ளது - பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் குத்தகைதாரர்களுக்கு ஒப்படைப்பு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே மாமன்றத்தின் ஒப்புதல் கோருதல் தொடர்பாக.

------------

கோவை மாநகராட்சி – மேற்கு மண்டலம் - வார்டு எண்.48 – ஆர்.ஜி.வீதியில் புதிய மலர் அங்காடி வளாகம் கட்டப்பட்டு அனைத்து பணிகளும் முடிவடைந்த நிலையில் உள்ளது என உதவி பொறியாளர் அவர்களது 15.05.2010-ம் தேதிய குறிப்பில் அதற்குரிய அரசு வழிகாட்டி மதிப்பையும் தெரிவித்து அவற்றிற்கு ஏல நடவடிக்கை எடுக்குமாறு தெரிவித்துள்ளார். அவ்வினங்கள் பின்வருமாறு உள்ளது.

<u>கட்டமைப்பு விபரங்கள்-</u>

**(A)** <u>சில்லரை கடைகள் - 27 கடைகள்</u>

| வ.எண். | கடைகளின் எண்ணிக்கை | அளவு | அரசு மதிப்பு மாதவாடகை |
|---|---|---|---|
| 1) | 18 Nos | 3.00 m x 2.50 m | 1920/- |
| 2) | 4 Nos | 2.57 m x 2.50 m | 1640/- |
| 3) | 2 Nos | 3.00 m x 3.78 m | 2890/- |
| 4) | 1 No | 3.00 m x 3.00 m | 2300/- |
| 5) | 2 Nos | 137 sq.ft (un size) | 3250/- |

**(B)** <u>மொத்த வியாபார கடைகள் - 18 கடைகள்</u>

| வ.எண். | கடைகளின் எண்ணிக்கை | அளவு | அரசு மதிப்பு மாதவாடகை |
|---|---|---|---|
| 1) | 18 Nos | 5.00 m x 3.00 m | 3816/- |

**(C)** <u>ஏல அறை – 1 -</u>

**(D)** <u>கழிப்பிடம் - (ஆண்கள், பெண்கள் - தனித்தனியாக)</u>

**(E)** <u>வாகன நிறுத்துமிடம்</u>

எனவே மேற்காணும் இனங்களில் ஏல அறை, கழிப்பிடங்கள் மற்றும் வாகன நிறுத்தும் இடம், குத்தகை இனங்களுக்கு ஒப்படைக்கும் நாள் முதல் அந்த வருடத்தின் நிதி ஆண்டு வரை மூன்றாண்டுகளில் முதலாம் ஆண்டிற்கு ஒப்படைக்கவும் மற்ற வணிக மைய கடைகளுக்கு மாத வாடகை அடிப்படையில் ஏற்கனவே உள்ள விதிமுறைகளின்படி 3 வருட காலத்திற்கு ஒப்படைக்கும் நாள் முதல் உரிமையாணை ஒப்படைக்கப்படும் என தெரிவித்தும், பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடத்தவும், இது தொடர்பான செலவுகளை அனுமதிக்கவும் வரி விதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மான எண்.14 நாள்.17.05.2010-ல் சில்லறைக் கடைகள், மொத்த வியாபாரக் கடைகள், ஏல அறை, கழிப்பிடம், வாகன நிறுத்துமிடம் முதலிய அனைத்தையும் ஒரே குத்தகை இனமாக ஒப்பந்தப்புள்ளி கோரி ஒப்படை செய்ய நடவடிக்கை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> அனுமதிக்கலாம். ந.க.எண்.9451 /10/ அ1 (மே)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 46 நாள் 21.05.10**

**1. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண். 14 நாள் 17.05.10ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

**2. R.G. வீதியில் புதியதாக கட்டப்பட்டுள்ள புதிய மலர் அங்காடி வளாகத்தில் உள்ள அனைத்து கடைகளையும், ஏல அறை, கழிப்பிடம், வாகன நிறுத்துமிடம் முதலிய அனைத்து வசதிகளையும் தனித்தனியாக குத்தகைக்கு விடவேண்டும் என தெரிவித்து சி.பி.எம்., சி.பி.ஐ., மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் 57வது வார்டு சுயேட்சை மாமன்ற உறுப்பினர் ஆகியோர் ஆட்சேபனை தெரிவித்தனர். அவர்களது ஆட்சேபனை பதிவு செய்யப்பட்டது.**

---

## பொருள் எண் 11

கோவை மாநகராட்சி, மேற்கு மண்டலம் வார்டு எண் 64-க்குட்பட்ட மேட்டுப்பாளையம் சாலையில் சுமார் 3.00 ஏக்கர் நிலப்பரப்பில் புதிய பேருந்து நிலையம் கட்டும் பணிக்கு அரசாணை எண். 12 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 28.01.2009ல் நிர்வாக அனுமதி பெற்று ரூ.700.00 லட்சங்கள் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு தற்போது பணிகள் முடிவு பெற்றுள்ளது. இந்த நவீன பி வகுப்பு பேருந்து நிலையத்திற்கு கோவையிலிருந்து வடதிசை நோக்கி சென்றுவரும் பேருந்துகளின் பயணிகள் மற்றும் பொது மக்களின் நலன்களை கருத்தில் கொண்டு கீழ்க்காணும் வசதிகள் அமைக்கப்பட்டு ISO தரச்சான்று பெறப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1 | பேருந்து நிறுத்து தடம் B class | .. | 25 எண்ணிக்கைகள் |
| 2 | பயணச்சீட்டு முன்பதிவு அறை | .. | 1 |
| 3 | பண்டக காப்பு அறை | .. | 1 |
| 4 | உணவகம் | .. | 1 |
| 5 | குளிர்சாதன வசதியுடன் கூடிய பெண்கள் ஓய்வறை | .. | 1 |
| 6 | குளிர்சாதன வசதியுடன் கூடிய ஆண்கள் ஓய்வறை | .. | 1 |
| 7 | நிர்வாகம் மற்றும் கணக்கு அறை | .. | 1 |
| 8 | வைப்பு அறை | .. | 1 |
| 9 | மின் விநியோக கட்டுப்பாட்டு அறை | .. | 1 |
| 10 | நவீன கழிப்பிடங்கள் | .. | 3 |
| 11 | வாகனம் நிறுத்தும் இடம் | .. | |
| | சாய்வு தளம் ஏற்றம் மற்றும் இறக்கம் கொண்டது | .. | முதல் தளம்<br>4சக்கர வாகனம் 18<br>2சக்கர வாகனம் 361 |
| 12 | மணிக்கூண்டு | .. | 1 |
| 13 | மின் உந்து - 1 டன்<br>13 நபர்கள் | .. | 1 |
| 14 | முதியோர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் சாய்வு தளம் | .. | 1 |
| 15 | கண்காணிப்பு கேமிரா | .. | 16 |
| 16 | ஓட்டுநர்கள் ஓய்வு அறை | .. | 1 |
| 17 | பாலூட்டும் தாய்மார்கள் அறை | .. | 1 |
| 18 | வர்ண மீன் தொட்டி | .. | 2 |
| 19 | முதல்தள கூடம் | .. | 1 |
| 20 | இரண்டாம் தள கூடம் | .. | 1 |
| 21 | காற்றாலை (2.5 கிலோ வாட்ஸ்) | .. | 1 |
| 22 | இரண்டாம் தளம் Sit out | .. | 1 |
| 23 | போலீஸ் கன்ட்ரோல் ரூம் | .. | 1 |

இந்நவீன வசதிகளுடன் கூடிய இப்பேருந்து நிலையத்தினை பொதுமக்கள் மற்றும் தனியார் பங்களிப்பு மூலம் (Public Private Partnership basis) பராமரிப்பு மற்றும் இயக்குதல் பணியினை மேற்கொள்ள Tamilnadu Urban Infrastructure Financial Services Limited, Chennai நிறுவனத்தினற்கு பிரேரணை அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கான விரிவான திட்ட அறிக்கை (DPR), சாத்தியக்கூறு அறிக்கை ( Feasibility report), மற்றும் ஒப்பந்தப்புள்ளி படிவங்கள்,

அனுகூல ஒப்பந்தப் படிவங்கள் ( **Concession agreement**) ஆகியவற்றினை தயாரிக்கும் பணிக்கு ஆலோசா்களை நியமனம் செய்ய கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

எனவே மேற்படி புதியதாக கட்டப்பட்டுள்ள பேருந்து நிலையத்தினை தனியாா் பங்களிப்புடன் பராமரித்தல் மற்றும் இயக்குதல் பணிக்கு ஒப்பந்தப் புள்ளிகள் கோர **Tamilnadu Urban Infrastructure Financial Services Limited, Chennai** மூலமாக விரிவான திட்ட அறிக்கை **(DPR)**, சாத்தியக்கூறு அறிக்கை (**Feasibility report)**, மற்றும் ஒப்பந்தப்புள்ளி படிவங்கள், அனுகூல ஒப்பந்தப் படிவங்கள் (**Concession agreement**) ஆகியவற்றினை தயாரிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு- அனுமதிக்கலாம் ந.க. எண். 7526/ 2002/ எம்.டி. 3

<u>மாநகர மன்ற தீா்மானம் எண் 47 நாள் 21.05.10</u>

1. அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீா்மானிக்கப்பட்டது.

2. பேருந்து நிலையத்தில் உள்ள அனைத்து வசதிகளையும் தனித்தனியாக குத்தகைக்கு விடவேண்டும் என தெரிவித்து சி.பி.எம்., சி.பி.ஐ., மாமன்ற உறுப்பினா்கள் மற்றும் 57வது வாா்டு சுயேட்சை மாமன்ற உறுப்பினா் ஆகியோா் ஆட்சேபனை தெரிவித்தனா். அவா்களது ஆட்சேபனை பதிவு செய்யப்பட்டது.

---

## பொருள் எண் 12

கோவை மாநகராட்சி கிழக்கு மண்டலம் சிங்காநல்லூா் பேருந்து நிலையம் இரண்டாவது பிளாட்பாரத்தில் **10'x10'** அளவிலான காலியிடத்தில் மாத வாடகை ரூ. **3350/-** என்ற அடிப்படையில் பொது ஏலம் மூலமாக 20.11.06 - 30.10.09 முடிய மூண்றாண்டுகளுக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டு, 31.10.09-ம் தேதி ஏலதாரா் மேற்படி இடத்தினை காலி செய்து மாநகராட்சி வசம் ஒப்படைப்பு செய்யாததால் 02.11.09-ம் தேதி அன்று மாநகராட்சி அலுவலா்களால் மேற்படி கடை அகற்றப்பட்டது.

தற்பொழுது தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினா் திரு. கோவை தங்கம் **MLA** மற்றும் சோ்மன் மனுக்கள் குழு அவா்களால் திருமதி **R.** மோகனசுந்தரி என்பவருக்கு சிங்காநல்லூா் பேருந்து நிலையத்தில் இரண்டாவது பிளாட்பாரத்தில் கடை வைக்க அனுமதிக்கக் கோரியும், மேற்படியாரின் உரிமத்தினை புதுப்பித்துத் தருமாறும் கோரியுள்ளாா்.

எனவே திருமதி மோகனசுந்தரி, தலைவி, முத்தமிழ் மகளிா் சுய உதவிக்குழு அவா்களுக்கு சிங்காநல்லாா் பேருந்து நிலைய இரண்டாவது பிளாட் பாரத்தில் கடை வைப்பது மற்றும் உரிமம் புதுப்பித்து தருவது சாா்பாக வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீா்மானம் எண் 126. நாள் 17.05.10 மகளிா் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் தவிர பிற பொருட்களை விற்பனை செய்யக்கூடாது என்ற நிபந்தனையுடன் வழக்கமான விதிமுறைகளுக்குட்பட்டு உரிமம் புதுப்பித்து வழங்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீா்மானம் நிறைவேற்றியுள்ளது.

எனவே வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீா்மானத்தின்படி, மகளிா் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் தவிர பிற பொருட்களை விற்பனை செய்யக்கூடாது என்ற நிபந்தனையுடன் வழக்கமான விதிமுறைகளுக்குட்பட்டு உரிமம் புதுப்பிப்பது சம்பந்தமாக மாமன்றத்தின் முடிவிற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண். **1424/2010/H1**

<u>மாநகர மன்ற தீா்மானம் எண் 48 நாள் 21.05.10</u>

மாநகராட்சியின் நிபந்தனைகளின்படி செயல்படாத காரணத்தினால் கடை அகற்றப்பட்டு உரிமம் ரத்து செய்யப்பட்டுள்ளது. எனவே பொருளில் குறிப்பிட்டுள்ளவாறு உரிமம் புதுப்பிக்க இயலாது. எனவே பொருள் ரத்து செய்து தீா்மானிக்கப்படுகிறது.

---

## பொருள் எண் 13

அங்கீகரிக்கப்பட்ட குடிசைப் பகுதி வாழ் மக்களில் சொந்த வீடு/ நில உடமைதாரா், வாடகை / குத்தகை வீட்டில் வசிப்போா், அரசாங்க நிலத்தை ஆக்கிரமித்து குடிசை கட்டியிருப்போா் மற்றும் அங்கிகரிக்கப்படாத குடிசை பகுதியில் குடிசை கட்டி வசிப்போா் ஆகியோரை பட்டியலிட்டு, அவா்களில் சொந்த வீடு கட்ட/ வாங்க விருப்பம் உள்ளவா்களை அறிந்து அவா்களின் முதலீட்டுத் திறனை ஆய்ந்து அதற்கேற்றவாறு அரசாங்க திட்ட உதவிகள் சென்றடையும் வழிகோலாக….. கோயமுத்தூா் மாநகராட்சியில் மத்திய அரசின் ராஜிவ் அவாஸ் யோஜனா திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் கீழ் கோவை மாநகராட்சியில் நான்கு மண்டலங்களுக்கு உட்பட்ட அங்கீகரிக்கப்பட்ட மற்றும் அங்கீகரிக்கப்படாத 177 குடிசைப்பகுதிகள் தோ்வு செய்யப்பட்டுள்ளது. மண்டலங்கள் பின்வருமாறு :

| வ.எண் | மண்டலம் | அங்கீகரிக்கப்பட்ட குடிசைப்பகுதிகள் | அங்கீகரிக்கப்படாத குடிசைப்பகுதிகள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | கிழக்கு | 33 | 23 | 56 |
| 2 | வடக்கு | 27 | 25 | 52 |
| 3 | மேற்கு | 22 | 22 | 44 |
| 4 | தெற்கு | 9 | 16 | 25 |
| மொத்தம் | | 91 | 86 | 177 |

மேற்படி தேர்வு செய்யப்பட்டுள்ள குடிசைப்பகுதிகளின் பட்டியல் மாநகர மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம் ந.க. எண்- 4534/2010/JN1

**மாநகர மன்ற தீர்மானம் எண் 49 நாள் 21.05.10**

பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள குடிசைப் பகுதிகள் மற்றும் மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள அனைத்து குடிசைப் பகுதிகளிலும் ராஜீவ் ஆவாஸ் யோஜனா திட்டத்தை செயல்படுத்த தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 14

கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலம் திருச்சி சாலையில் நான்கு வழிச்சாலையாக விரிவுபடுத்தும் பணி நடைபெறுவதால் அச்சாலை அகலப்படுத்த மாநகராட்சி ஆரம்பப் பள்ளி ஒண்டிப்புதூர் (தெற்கு) சொந்தமான நிலம் 118 ச.மீ தேசிய நெடுஞ்சாலைத்துறை மூலம் கையகப்படுத்தப்படவுள்ளது.

இந்நிலையில் மாநகராட்சிக்குச் சொந்தமான பள்ளியின் விரிவாக்கப் பகுதிக்குட்பட்ட இடத்தில் பரப்பளவான 118 ச.மீ. அளவில் பள்ளிக் கட்டிடம் 6.00 ச.மீ. மற்றும் சத்துணவுக் கூடம் 20 ச.மீ பகுதிகளை இடித்து அப்புறப்படுத்தவும், 2) காமராசர் சாலையில் சுமார் 50 வருடங்களுக்கு முன்னர் கட்டப்பட்ட கிணற்றுநீர் தொட்டி சாலையின் விரிவாக்கத்தில் உள்ளதால் பயனற்ற நிலையில் உள்ள 12.25 ச.மீ பரப்புள்ள தொட்டியினையும் அப்புறப்படுத்த கல்வி, பூங்கா மற்றும் விளையாட்டுக்குழு தீர்மானம் எண் 4 நாள் 5.5.2010ல் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. எனவே மாமன்ற ஒப்புதலுக்காக.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண் 4930/10/EH1

**மாநகர மன்ற தீர்மானம் எண் 50 நாள் 21.05.10**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 15

பொருள் கோயமுத்தூர் மாநகராட்சி – தெற்கு மண்டலம் - தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்திற்கு – காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம் தடம் எண்.2ல் சுற்றுச்சூழல் பற்றி விபரம் தெரிவிக்க மின்னணு பலகை அமைக்க அனுமதி அளித்தது – மாற்றம் செய்து நகர பேருந்து நிலையத்தில் சுற்றுச்சூழல் மின்னணு பலகை அமைக்க அனுமதி வேண்டி - மன்றத்திற்கு பொருள் வைப்பது – தொடர்பாக.

பார்வை - 1) மாமன்ற தீர்மான எண்.167 நாள்.29.12.2009.
2) தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் மேலாளர் அவர்களது கடித எண். கோ.பொ.தொ.து.55/இ1 /து.மே(ஆ)/மாசுசூஆ/ கோவை/09 நாள்.26.02.2010.

******

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்தில் பார்வை 1ல் கண்டுள்ள தீர்மானத்தின் படி தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் அவர்கள் சுற்றுசூழல் பற்றிய விபரம் தெரிவிக்க மத்திய பேருந்து நிலையம் தடம் எண்.2ல் மின்னணு பலகை அமைக்க அனுமதி அளிக்கப்பட்டிருந்தது.

பார்வை 2-ல் காணும் கடிதத்தில் சுற்றுச்சூழல் பற்றி அனைத்து தரப்பு மக்களும் அறிந்து கொள்ளும் வகையில் நகரப் பேருந்து நிலையத்தில் மின்னணு பலகை அமைக்க அனுமதி வேண்டியிருப்பதால் ஏற்கனவே மாமன்ற தீர்மானத்தின்படி அனுமதி அளித்ததை மாற்றம் செய்து நகர பேருந்து நிலையத்தில் மின்னணு பலகை அமைக்க ஏற்கனவே தெரிவித்துள்ள நிபந்தனைகளின்படி அனுமதி அளிக்க மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்.1987/ 2010/ டி-2 (தெ)

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 51 நாள் 21.05.10</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது

---

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி